# பேச்சுக் கலை மன்றம்: அசத்தலான துவக்க விழா

லயோலா கௌஷல் கேந்திரா தனது 2019-20 கல்வி ஆண்டிற்கான பேச்சுக் கலை மன்றம் தனது துவக்க விழாவை 2019 ஜூலை 24ஆம் தேதியன்று சிறப்பாக நடத்தியது.

லயோலா சமுதாய வானொலியின் இயக்குநர் அருட்தந்தை டாக்டர் ஏ.சகாயராஜ் நிகழ்வுக்கு தலைமையேற்றார். செய்தியாளரும் மேடைப் பேச்சாளருமான அருள் வளன் அரசு நடுவராக கலந்துகொண்டார். லயோலா கௌஷல் கேந்திரா இயக்குநர் எம்.மாலினி அவர்களின் வழிகாட்டுதலில் துவக்க விழா சிறப்பாக நிகழ்ந்தது.

சினிமா நடிகர்கள் அரசியல் பேசுவது, சுயநலமா, பொது நலமா என்ற தலைப்பில் ஆறு மாணவர்கள் பேசினார்கள். மாணவர்களே திட்டமிட்டு, ஒருங்கிணைந்து, நடத்தி முடித்த இந்த நிகழ்வு பங்கேற்பாளர்களின் பெரு ஆதரவுடன் வெற்றிகரமாக தனது கணக்கைத் துவக்கியது.



**பரிசு வென்ற மாணவர்கள், ஆசிரியர்களுடன் நடுவர் திரு. வளன் அரசு.**